<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 57/2022</u>
<u>வழக்கு சாட்சி PW–8</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர்.மூர்த்திராஜ் | தாலுகா | : | பாளையங்கோட்டை |
| தந்தை பெயர் | : | சங்கரபாண்டி | தொழில் | : | அரசு மருத்துவர் |
| கிராமம் | : | பாளையங்கோட்டை | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 02nd, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது பாளையங்கோட்டை மத்திய சிறை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.05.2015ம் தேதி, மதியம் 03.30 மணியளவில் நான் தென்காசி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, அதே தேதி, காலை 08.30 மணியளவில் தென்காசி புது பேருந்து நிலையம் அருகில் வைத்து அடையாளம் தெரிந்த நபர் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக கூறி தென்காசி காவலர்கள் குடியிருப்பைச் சேர்ந்த மைதீன் என்பவரது மகன் சக்கீர், வயது 32 என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு ஆஜரானார். நான் அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு பொதுவான உடல் வலி இருந்ததாக தெரிவித்தார். அவருக்கு தக்க முதலுதவி சிகிச்சை அளித்து தென்காசி அரசு மருத்துவமனையில் ஆண்கள் அறுவை சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக அனுமதித்தேன்.

01.06.2015ம் தேதி அவர் சிகிச்சை முடிந்து சென்றார். மேற்படி சக்கீர் என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று காயச்சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.4** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

காயம்பட்ட நபருக்கு வெளிப்படையான காயங்கள் இல்லை என்றால் சரிதான். காயம்பட்டவர் உடல்வலி இருந்ததாக பொய் கூட சொல்லியிருக்கலாம் என்றால் சரிதான். உடலில் வலி இருப்பதாக வரும் நபரை உள்நோயாளியாக அனுமதிக்க மாட்டோம் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.03 11:30:59 +0530